# இணைப்பு - 2.5

## 28.7.98 மற்றும் 29.7.98 ஆகிய நாட்களில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற முதல்நிலைக் குழுவின் ஐந்தாவது கூட்ட நடவடிக்கை குறிப்பு.

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்குவது குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட முதல் நிலைக் குழுவின் ஐந்தாவது கூட்டம் 28.7.98 மற்றும் 29.7.98 ஆகிய நாட்களில் தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை. 9வது மாடியில் உள்ள தொழில் துறை கூட்ட அறையில் மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) மற்றும் குழுவின் அமைப்பாளர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

2. இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

| | |
|---|---|
| 1. திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர். | தி.மு.க. |
| 2. திரு.என்.ஆர்.அழகராஜா, சட்டமன்ற உறுப்பினர், | தா.மா.க. |
| 3. திரு.சொ.கருப்பசாமி, சட்டமன்ற உறுப்பினர், | அ.இ.அ.தி.மு.க. |
| 4. திரு.எல்.சந்தானம், சட்டமன்ற உறுப்பினர், | அ.இ.பா.பிளாக். |
| 5. திரு.அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர், | இ.தே.லீக் |
| 6. திரு.ஏ.எம்.கோபு, | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, |
| 7. திரு.ஜி.இராமகிருஷ்ணன், | இ. கம்யூனிஸ்ட் (மார்க்கிஸ்ட்) |
| 8. திரு.பி.அய்யாக்கண்ணு, | ஜனதா தளம் |
| 9. திரு.பரமத்தி சண்முகம். | தி.மு.க. |

3. முதல் நிலைக் குழுவின் ஐந்தாவது கூட்டத்தை துவக்கி வைத்து செயலர், ஊரக வளர்ச்சித் துறை அவர்கள் பேசுகையில் இக்கூட்டத்தை இரண்டு முறை ஒத்தி வைத்ததால் உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்கு வருத்தம் தெரிவித்தார்.

4. 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பட்டியல்-IVல் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் ஒப்படைப்பு செய்ய குறிப்பிட்டுள்ள 29 இனங்களில் அரசாணைகள் மூலமாக ஒப்படைப்பு செய்தது மற்றும் முந்தைய கூட்டங்களில் விவாதித்து ஏற்றுக் கொண்டது போக மீதி இனங்களில் வைக்கப்பட்ட விவாதப் பொருள்களை குழு ஒரு மனதாக ஏற்றுக்கொண்டது. மேலும் குழு கீழ்கண்ட இனங்களில் என்னென்ன அதிகாரங்கள், பொறுப்புகள் வழங்கலாம் என்று பல்வேறு கருத்துக்களை தெரிவித்துள்ளது.

<u>ஊராட்சிகள்</u>

<u>(1) முதியோர் கல்வி மற்றும் முறைசாரா கல்வி.-</u> இத்திட்டத்தில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் கல்வி அறியாமையை அகற்ற ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் வழங்கலாம் என்று உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

<u>(2) நூலகங்கள்:</u> ஊராட்சி பிரதிநிதிகள் கிளை நூலகங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் கிளை நூலகங்கள் சரிவர இயங்க ஆலோசனைகள் வழங்குதல் போன்ற அதிகாரங்களை வழங்கலாம் என்று உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். ஊராட்சிகளில் உள்ள நூலகங்கள் பல நாட்கள் மூடி கிடப்பதாகவும் அங்கு வேலை செய்யும் ஊழியர்கள் ஒழுங்காக வேலைக்கு வருவதில்லை என்றும் உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அவ்வாறு ஒழுங்கீனமாக நடந்து கொள்ளும் ஊழியர்கள் மீது புகார் அறிக்கைகள் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அனுப்பவும் அவ்வாறு அனுப்பப்படும் புகார்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அரசு மட்டத்தில் அறிவுரைகள் வழங்க வேண்டும் எனவும் உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர்.

<u>(3). சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்-</u> ஊராட்சி கட்டுப்பாட்டில் உள்ள சந்தைகளுக்கு அனுமதி கட்டணமாக (Licence Fee) சிறிய தொகையை செலுத்தி விட்டு தனி நபர்கள் பெரும்

லாபம் ஈட்டுகின்றனர். அனுமதி கட்டணம் செலுத்துவதை முறைப்படுத்தினால் ஊராட்சிகளுக்கு அதிக லாபம் கிடைக்க வாய்ப்பு உண்டு என்று உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். இது குறித்து உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எழுத்து மூலம் விவரமாக அளிக்கும்படி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

(4) மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்தகங்கள் உள்ளிட்ட சுகாதார நலன்கள் - ஊரக வளர்ச்சித் துறையின் 4.7.97 நாளிட்ட அரசாணை எண்.220ல் ஊராட்சிகளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரங்களில் மாவட்ட/வட்ட தலைமை மருத்துவமனைகள் மேம்படுத்துதல் தலைப்பில் ஊராட்சிகள் பயனீட்டாளர்களை கண்டறிதல் மற்றும் உதவுதல் ஆகிய பொறுப்புகளை ஒப்படைப்பு செய்துள்ளது. மேலும் அந்தந்த ஊராட்சி எல்லைக்குள் இயங்கும் அரசு மருத்துவமனைகள் மேற்பார்வை செய்யவும் மருத்துவமனைகளில் பணியாற்றும் களப்பணியாளர்களின் பணிகளை கண்காணித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிக்கைகள் ஊராட்சி பிரதிநிதிகள் அனுப்ப அதிகாரம் அளிக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

(5) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் நலிந்தோர் நலன் - 1995ஆம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்பு சட்டம் மற்றும் 1989ம் ஆண்டு வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் ஊராட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள் காவல் நிலையங்களில் புகார்கள் பதிவு செய்தால் அப்புகார்கள் மீது காவல் துறையினர் தக்க நடவடிக்கை மேற்கொள்ள அரசு மட்டத்தில் அறிவுரை வழங்க உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர்.

(6) சமுதாய சொத்துக்கள் பேணுதல் - ஊராட்சி அமைப்புகள் தங்கள் ஊராட்சி எல்லைக்குள் என்னென்ன சமுதாய சொத்துக்கள் உள்ளடங்கி உள்ளன என்ற விவரத்தை பட்டியலிட்டு ஊராட்சி அலுவலகத்தில் பார்வைக்கு வைக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். ஊராட்சி எல்லை வரைப்படம் மக்கள் தொகை ஆகிய விவரங்கள் கொண்ட பலகையை மக்கள் பார்வைக்கு ஒவ்வொரு ஊராட்சி அலுவலகத்திலும் கண்டிப்பாக வைக்கவேண்டும் என்று உறுப்பினர்கள் வலியுறுத்தினர். மேலும் உள்ளாட்சி அமைப்புகள் குறித்து அரசு வெளியிடும் ஆணைகள் தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு அரசு செய்தியில் வெளியிடுகிறது. இதை ஒவ்வொரு ஊராட்சிக்கும் அனுப்பப்பட்டு ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் மக்கள் பார்வைக்கு சுவரொட்டிகளை ஒட்டவேண்டும் என்றும் உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

ஊராட்சி ஒன்றியங்கள்

(1) சாலைகள், சிறுபாலங்கள் மற்றும் ஏனைய போக்குவரத்து தொடர்புகள் - சாலை ஓரங்களில் நடப்படும் கன்றுகள் பாதுகாப்புடன் வளர்க்க ஊராட்சி ஒன்றிய அமைப்புகள் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

(2) ஊரக மின்மயமாக்கல் - ஊராட்சிகளுக்கு தெரு விளக்குகள் அமைக்கும் போது மின்வாரியத்தால் மின்கம்பம் அமைக்கும் பணியை மேற்கொள்வதற்கு அதற்கு உண்டான கட்டணத்தை ஊராட்சிகளிடமிருந்து வசூலிப்பதை தவிர்த்து அப்பணியை மின்சார வாரியம் இலவசமாக செய்து கொடுக்க வேண்டுமென உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

(3) நூலகங்கள் - ஊராட்சி ஒன்றியங்களில் அமைந்துள்ள நூலகங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் நூலகங்கள் சரிவர இயங்க ஆலோசனைகள் வழங்குதல் போன்ற அதிகாரங்களை வழங்கலாம் என்று உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

(4) மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்தகங்கள் உள்ளிட்ட சுகாதார நலன்கள் - ஊரக வளர்ச்சித் துறையின் 4.7.97 நாளிட்ட அரசாணை எண்.220ல் ஊராட்சிகளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரங்களில் மாவட்ட/வட்ட தலைமை மருத்துவமனைகள் மேம்படுத்துதல் தலைப்பில் ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகள் மருத்துவமனைகளை மேற்பார்வை மற்றும் ஆய்வு செய்யவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி பிரதிநிதிகள் மாவட்ட தலைநகரங்களில் அமைந்துள்ள மருத்துவமனைகளை மேற்பார்வை செய்யலாம் என்றும் மேலும் அதை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் வழங்கலாம் என்றும் ஆனால் ஆய்வு செய்யும் அதிகாரம் வழங்கியுள்ளதை நீக்கம் செய்யலாம் என்றும் உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

மாவட்ட ஊராட்சி

(1) குடிநீர் வசதி - மாவட்ட ஊராட்சிகள் குடிநீர் திட்டத்தை பராமரிக்க தொழில் நுட்பக் குழு ஒன்றை மைத்து பராமரிக்க வேண்டும் என்றும் கூட்டு குடிநீர் திட்டத்தை செயல்படுத்த மாவட்ட ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரம் வழங்கலாம் என்றும் உறுப்பினர்கள் கருத்துக்கள் தெரிவித்தனர்.

(2) **நூலகங்கள் -** மாவட்ட தலைநகரங்களில் இயங்கி வரும் மாவட்ட நூலகங்களை நிர்வகிக்கின்ற பொறுப்புகளை மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும் என்று உறுப்பினர்கள் கருத்துக்கள் தெரிவித்தனர்.

(3) சமுதாய சொத்துக்கள் பேணுதல் - மாவட்ட வளர்ச்சி குழுமத்திற்கு சொந்தமான அனைத்து உடமைகளையும் அந்தந்த மாவட்ட ஊராட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்று உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

(4) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் நலிந்தோர் நலன்.- மாவட்டத்தில் தீண்டாமை கொடுமைகளை முறைக்கு கொண்டுவர மக்கள் மத்தியில் விழப்புணர்வை உருவாக்க மாவட்ட ஊராட்சிகளுக்கு திட்டமிடல் மற்றும் அமுலாக்குதல் போன்ற அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்று உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

5. இக்குழுவின் அடுத்த கூட்டம் கன்னியாகுமரியில் நடைபெறும் என்றும் இக்கூட்டத்திற்கான தேதி பின்னர் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் (ஊ.வ.(ம) உ) துறை அவர்கள் தெரிவித்தார். மேலும் கன்னியாகுமரியில் நடைபெறும் கூட்டத்தில் பொது பொருள்கள் விவாதிக்கப்படும் என்றும் எனவே உறுப்பினர்கள்தங்களது கருத்துக்களை எழுத்து வடிவில் ஊரக வளர்ச்சித் துறை செயலருக்கு அனுப்பி வைக்கும்படி அனைத்து உறுப்பினர்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்.